விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 19 புதன்கிழமை (05.12.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 351




## கையடக்கத் தொலைபேசிச் சேவைகள் யாழில் தற்காலிகமாக இடைநிறுத்தம்

யாழ்.குடாநாட்டில் கையடக்கத் தொலைபேசிச் சேவைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே கையடக்கத் தொலைபேசிச் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் அச் சேவை மீண்டும் செயற்படுத்தும் காலம் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இதேவேளை கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட மோதல் சம்பவம் காரணமாகவும் கையடக்கத் தொலைபேசிச் சேவைகள் இடை நிறுத்தப்பட்டு மீண்டும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸாரால் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டமைக்கு சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம் தெரிவித்துள்ளது. மன்னிப்புச் சபையின் கண்டன அறிக்கை வருமாறு,

கொழும்பில் நவம்பர் 28 ஆம் திகதி நடந்த தற்கொலைத் தாக்குதல்களுக்குக் காரணமானவர்கள் என்று கூறி பொலிஸாரினால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இனப்பாகுபாட்டின் அடிப்படையில் அவசரகாலச் சட்டங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தக் (08 ஆம் பக்கம் பார்க்க)

# கைதான 2554 பேரில் 2350 பேர் விடுவிப்பு

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 86 பேர் உட்பட

# 100 பேர் சந்தேகத்தில் தடுத்து வைப்பு

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் கைது செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்களில் பெரும்பாலானோரை விடுதலை செய்து விட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. தமிழர்களை இலக்கு வைத்து இந்தக் கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுவதையும் அரசு மறுத்துள்ளது.

கொழும்பில் அண்மைய நாள்களாக இடம்பெற்ற தேடுதலின்போது 2 ஆயிரத்து 554 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 2ஆயிரத்து 350 பேர் விடுதலை செய்யப்பட்டனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 86 பேர் உட்பட 100 பேர் விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்பட்டுத் தடுத்து வைக்கப்பட் டுள்ளனர் என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## யால சரணாலயத்தில் படையினர் - புலிகள் மோதல்

(கொழும்பு)

யால சரணாலயத்தின் வடக்குத் திசையில் அமைந்துள்ள தொமடகலவுக்கும் தெபரற தூவவிற்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று மாலை 5.10 மணியளவில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் படை வீரர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இம்மோதல் சம்பவத்தில் புலிகள் தரப்பில் 4 பேர் காயமடைந்துள்ளதாகவும் படையினரின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத புலிகள் பின்வாங்கி (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயராஜ் - மகேஸ்வரன் சபையில் வாய்த்தர்க்கம்

(கொழும்பு)

நாடாளுமன்றில் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி மகேஸ்வரனுக்கும், அரசின் பிரதம கொறடாவான அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்குமிடையில் பெரும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

தமிழர் கைது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் எழுப்பிய ஒழுங்கு பிரச்சினையை அடுத்து இத்தகைய நிலைமை ஏற்பட்டது.

சபாநாயகர் வி.ஜே.மு.லொக்கு பண்டார தலைமையில் நேற்று காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடியது. வழமையான தினப் பணிகள் முடிபடைந்ததும் மகேஸ்வரன் எம்.பி சபாநாயகரிடம் தமிழர்கள் கைது தொடர்பில் விளக்கமொன்றினை கோரினார்.

அதன் பின் உரையாற்றி அவர், தமிழர்கள் கைது விவகாரம் தொடர்பாக இந்த சபையில் பேசினால் (08 ஆம் பக்கம் பார்க்க)

## சின்னக்கடைப் பகுதியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் சின்னக்கடை மீன்சந்தைப் பகுதியில் நேற்றுக்காலை 10 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் குருநகர் புதுமை மாதா கோவில் வீதியைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான கண்ணக்கநாதன் றெக்ஸ் எடின் (வயது-33) என்ற குடும்பஸ்தரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

குருநகர் சின்னக்கடை மீன் சந்தைக்கு மீன் வாங்கச் (08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நீதிமன்றப் பாதுகாப்பின் கீழ் கானான் சிறுவர் இல்லத்தில் உள்ளோரை புனர்வாழ்வு நிலையத்திற்கு மாற்றப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

உயிர் அச்சுறுத்தல் எனத் தெரிவித்து யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைந்து நீதிமன்றப் பாதுகாப்பில் அங்கீகரிக்கப்பட்ட கானான் சிறுவர் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளோரை உடனடியாக புனர்வாழ்வு நிலையத்திற்கு மாற்றுமாறு பிரதம நீதியரசர் சரத் என் சில்வா உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதன் பிரகாரம் கானான் சிறுவர் இல்லத்தில் உள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களை இன்று யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியிலுள்ள பழைய மேல் நீதிமன்றக் கட்டடத்திலுள்ள புனர்வாழ்வு நிலையத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உயிருக்கு (02 ஆம் பக்கம் பார்க்க)

## நாயன்மார்கட்டுப் பகுதியில் கொள்ளையர்கள் அட்டகாசம்

### முன்னாள் அதிபர் உட்பட ஐவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு கொள்ளையர்கள் மேற்கொண்ட தாக்குதலில் யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் உட்பட ஐவர் படுகாயமடைந்தனர்.

நாயன்மார்கட்டு வெயிலுகந்தபிள்ளையார் கோவிலுக்கு முன்பாக உள்ள யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் சிறிக்குமாரின் வீட்டிற்குள் அன்றிரவு நுழைந்த கொள்ளையர்கள் கூட்டம் அங்கிருந்தவர்களைக் கோடரி மற்றும் கூரிய ஆயுதங்கள் கொண்டு தாக்கிக் காயப்படுத்தியதுடன் அங்கிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளது.

அத்துடன் (08 ஆம் பக்கம் பார்க்க)

பெண்களிற்கு எதிரான வன்முறை ஒழிப்பு- 16 நாள் முன்னெடுப்புகள் Nov 25 - Dec 10



பெண்கள் மீதான வன்முறையானது கால ஓட்டத்தில் அவர்களை மனநோயாளி ஆக்கிவிடும்

பால் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக்குழு, யாழ்ப்பாணம் - 021 222 6922, 021 222 9671

(C-560)

# கொழும்பில் தமிழர்கள் கைது வீரமணி கண்டித்து அறிக்கை

தென்னிலங்கையில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டமைக்கு தமிழ்நாடு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கண்டனம் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

இலங்கையில் தமிழினப் படுகொலைகளும் தமிழர்களை காடு,வனாந்திரங்களுக்கு சிங்கள இராணுவம் விரட்டி, பசி, பட்டினியால் சாகும் நிலையை ஏற்படுத்தும் கொடுமைகளும், அதன் வடக்கு கிழக்குப் பகுதிகளில் வெகு மூர்க்கத்தனமாக நடைபெற்று வருகிறது.

அக் கொடுமைகளுக்கு சிகரம்போல நவம்பர் 30ஆம் திகதி முதல் டிசம்பர் 2ஆம் திகதிவரை சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட, தலைநகர் கொழும்பில் வாழும் தமிழர்கள் எவ்வித காரணமுமின்றி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இப்படிப் பட்ட செய்திகளை கேட்டு நம் உள்ளம் வேதனைத் தீயில் வெந்து கொண்டிருக்கிறது.

உலகிலேயே தமிழினம் ஒன்றுதான் நாதியற்ற இனமாகிவரும் இரங்கத்தக்க நிலை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமும்நடந்தவண்ணமுள்ளது. என்ன கொடுமை!

முன்பு ஒருமுறை சில மாதங்களுக்கு முன் இதுபோல சம்பவம் நடந்தது. உலகில் பல்வேறு அமைப்புக்களும் கண்டனம் தெரிவித்ததோடு இலங்கையில் உச்ச நீதிமன்றமும் கூடக் கண்டித்தது.

அந்நாட்டு நாடாளுமன்றத்தில் கூட கண்டனக் குரல் எழுப்பப்பட்டது. அதன் பிறகுதான் தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த கோரத்தாண்டவம் மீண்டும் இலங்கை அரசால் அரங்கேற்றப்பட்டு அதன் தலைநகர் வாழ் தமிழர்களை கைது செய்வது இப்பொழுதும் தொடர்கிறது.

கொழும்பு வாழ் தமிழர்கள் செய்த குற்றம் அவர்கள் தமிழர்களாக இருப்பதுதானா? இதை வன்மையாக கண்டிப்பதுடன் இதற்கு மத்திய அரசு கடுமையான கண்டனத்தை தெரிவித்து அவர்களை காப்பாற்ற முன்வர வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மத்திய அரசின் -குறிப்பாக பிரதமரின் கவனத்திற்கு- முன்பு மலேசியத் தமிழர்கள் பிரச்சினைகளை கடிதம் மூலம் சுட்டிக் காட்டியதை போல் சுட்டிக்காட்டி, போதிய நடவடிக்கைகளை எடுக்க வற்புறுத்த வேண்டும் என்றும் அவர்களை உரிமையுடன் வேண்டிக்கொள்கிறோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# தமிழீழ விடுதலைப் புலிகளின் பகுதிகளை அடுத்த வருடத்துக்குள் அழிக்க வேண்டும்

## ஜே.வி.பி. வலியுறுத்தல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளையும் அவர்களது இராச்சியத்தையும் அடுத்த வருட இறுதிக்குள் அரசாங்கம் முற்றாக அழிக்க வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளரும் ஜே.வி.பியின் பிரசார செயலாளருமான விமல் வீரவன்ச வலியுறுத்தினார்.

பயங்கரவாதத்தை வெற்றிகொள்வதானால் படையினரின் உயிர்களை பறிகொடுத்து யுத்தம் செய்தால் மட்டும் போதாது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்து அரசியல் ரீதியாகவும் செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு தேசிய நூலக ஆவணவாக்கல் திணைக்கள கேட்போர் கூடத்தில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

போர் நிறுத்த ஒப்பந்தம் என்பது ஒரு போலியானதும் பொய்யானதுமான நடவடிக்கையாகும். இந்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தும் கூட இன்று பல உயிர்கள் பலியெடுக்கப்படுகின்றன.

புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் சர்வதேசத்தின் சதித்திட்டங்களை அரசாங்கம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஜோன் ஹோம்ஸ் என்பவர் உலகத்திலேயே அதிக துன்பங்களை அனுபவித்து வரும் ஐந்து நாடுகளில் இலங்கையும் ஒன்று என கடந்த வாரத்தில் தெரிவித்திருக்கிறார்.

எமது நாட்டில் பயங்கரவாதம் உள்ளது. அதனை கட்டுப்படுத்த தேடுதல்கள், கைதுகள் என்பன சகஜமானவை. ஆனாலும் எமது நாட்டு மக்களுக்கு ஏற்படும் மனித உரிமைகள் தொடர்பான அசௌகரியங்களுக்காக பேச நாம் இருக்கிறோம்.

அதற்காக வெளிநாட்டவர் தேவையில்லை. குரல் கொடுக்கவும் தேவையில்லை. முதலாவதாக சர்வதேச உள்ளீடுகளில் இருந்தே சுதந்திரம் பெறவேண்டும். சர்வதேசத்தின் சதித்திட்டங்களை வெற்றி கொள்ள வேண்டும். (ச-5)

# இலங்கை சுதந்திர நாள் விழாவில் இந்தியப் பிரதமர் பங்கேற்கக் கூடாது

## இந்திய கிறிஸ்தவ மதச் சார்பற்ற கட்சி வலியுறுத்தல்

இலங்கை சுதந்திர நாள் விழாவில் இந்தியப் பிரதமர் பங்கேற்கக் கூடாது என்று தமிழ்நாட்டின் இந்திய கிறிஸ்தவ மதச்சார்பற்ற கட்சி வலியுறுத்தியுள்ளது. அக்கட்சியின் தேசிய தலைவர் எம்.எஸ். மார்ட்டின் தலைமையில் நடந்த நிர்வாகிகள் கூட்டத்தில் இத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

மலேசியத் தமிழர்கள் மீதான தாக்குதல் மீண்டும் நடைபெறாமல்இருக்க மத்திய அரசு தலையிட்டு பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும்.

விவசாயத்துக்கு தனி ஆணையம் அமைக்க வேண்டும். இலங்கை சுதந்திர நாள் விழாவில் இந்திய பிரதமர் பங்கேற்கக் கூடாது என்பது உள்ளிட்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன (ச-5)

# ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் வீ.ஆனந்தசங்கரி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் த.சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா) பொதுச் செயலாளர் தி.சிறீதரன் ஆகியோர் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்பு குறித்து அவர்கள் மூவரும் கையொப்பமிட்டு வெளியிட்ட அறிக்கை வருமாறு,

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தமிழர்கள் பெருவாரியாக கைது செய்யப்படுவது, தடுத்து வைக்கப்படுவது, கொழும்பு-வவுனியா ரயில் சேவை நிறுத்தப்பட்டிருப்பது தொடர்பான பிரச்சினைகள் பற்றி நாம் மூன்று கட்சியினரும் இன்று(நேற்று) ஜனாதிபதியுடன் அவசர சந்திப்பொன்றை நடத்தினோம்.

அப்பாவிகளான தமிழர்கள் பெருமளவில் கைது செய்யப்படுவதை சுட்டிக்காட்டியதோடு தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதுகாக்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தினோம்.

தவிர வவுனியாவுக்கும் கொழும்புக்கும் இடையிலான ரயில் சேவை மதவாச்சி வரையில் என மட்டுப்படுத்தப்பட்டமையினால் தமிழ்மக்கள் அனுபவிக்கும் அசௌகரியங்களை சுட்டிக்காட்டியதோடு துரிதமாக ரயில் சேவை ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தினோம்.

எமது வேண்டுகோள்களை ஜனாதிபதி கரிசனையுடன் செவிமடுத்தார். சந்தேகத்துக்குரியவர்களாக கருதப்படுபவர்கள் தவிர்ந்த அனைத்துத் தமிழர்களும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என ஜனாதிபதி எமக்கு உறுதியளித்ததோடு ஓரிரு நாட்களில் வவுனியா-கொழும்பு ரயில் சேவை நேரடியாக மீள ஆரம்பிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

# கானான் சிறுவர் இல்லத்தில்...

அச்சுறுத்தல் காரணமாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைந்து யாழ். நீதிமன்றப் பாதுகாப்பில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் கானான் சிறுவர் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளன.

இவர்களை புதிதாக அமைக்கப்பட்ட புனர்வாழ்வு நிலையத்திற்கு உடனடியாக மாற்றுமாறு, புனர்வாழ்வு ஆணையாளரும் நீதியமைச்சின் செயலாளருமான சுகத் கம்லத், யாழ்.அரச அதிபர் க.கணேஷ், யாழ். இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி மற்றும் யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்குப் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா பணிப்புரை வழங்கியுள்ளார்.

மேலும் யாழ்.நீதிமன்றப் பாதுகாப்பில் யாழ்.சிறைச்சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள ஆண்களை காரைநகரில் அமைக்கப்பட்டு வரும் புனர்வாழ்வு நிலையத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் புனர்வாழ்வு ஆணையாளருக்குப் பிரதம நீதியரசர் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வுத்தரவுக்கு அமைய புனர்வாழ்வு ஆணையாளர் சுகத் கம்லத் தலைமையிலான குழுவினர் எதிர்வரும் வாரம் யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளனர். யாழ். விஜயம் செய்யும் அவர்கள் காரைநகர் புனர்வாழ்வு நிலையத்தை ஆரம்பிப்பது தொடர்பான பணிகளை ஆராய்வர் என நீதி பரிபாலன வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

# மருதானையில் பதற்றம்

(மருதானை)

மருதானை டீன்ஸ் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் நேற்று திடீரென பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டமையினால் அங்கு பெரும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இப்பகுதியில் குண்டு பொருத்தப்பட்டிருந்த வாகனம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக வதந்தி பரவியதனால் மக்கள் பெரும் பீதிக்குள்ளாகினர்.

இது தொடர்பாக மருதானை பொலிஸாரை தொடர்பு கொண்டு கேட்டபோது தாம் வழமையான சோதனை நடவடிக்கையையே மேற்கொண்டதாக மருதானை பொலிஸார் தெரிவித்தனர்.

குண்டுள்ள வாகனம் சோதனைக் குட்பட்டதாக கூறப்படும் தகவலில் எதுவித உண்மையுமில்லை எனவும் அவர்கள் கூறினர். (ச-5)

## பதவியேற்பு வைபவமும் சஞ்சிகை வெளியீடும்

பெரியபுலம் மகா வித்தியாலய இன்ரறக்ட் கழகத்தின் 3 ஆவது பதவியேற்பு வைபவமும் 'புலம்' சஞ்சிகை வெளியீடும் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக றோட்டறிக் கழகத் தலைவர் க.பாலசுப்பிரமணியம் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக லயன் எச்.முரளிதரன், லயன் நீ.தர்மகுலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ச)


BOC இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளைகளில் 31.08.2006 ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் 28.02.2007ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம் நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக்கிளை<br>யாழ். 2ம் மேற்தரக்கிளை<br>திருநெல்வேலி<br>ஊர்காவற்றுறை<br>காரைநகர்<br>மானிப்பாய்<br>சுன்னாகம்<br>(அச்சுவேலி விரிவாக்கற் கிளை உட்பட)<br>காங்கேசன்துறை<br>நெல்லியடி<br>பருத்தித்துறை<br>சாவகச்சேரி | யாழ்.மேற்தரக்கிளை யாழ்ப்பாணம்<br>2007 டிசம்பர் மாதம் 8ம் 9ம்<br>திகதிகளில் காலை 9.30 மணிக்கு |

இந்த ஏல விற்பனையை ஒன்றிணைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

04.12.2007

உதவிப் பொது முகாமையாளர்
இலங்கை வங்கி (வட பிராந்தியம்)
உதவிப்பொதுமுகாமையாளர் காரியாலயம்
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

021 222 3126
021 222 2735

(C/579)




திருமறைக் கலாமன்றத்தினால் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்ட தடங்கள் இறுவெட்டின் முதற்பிரதியை யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரிடமிருந்து, திருமறைக் கலாமன்ற மூத்த உறுப்பினர்களில் ஒருவரான ஏ.வி.ஆனந்தன் பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம். (படம்: சுதாகர்)

# இன்று ஒரு தகவல்

## தந்திரம்

இந்த உலகத்திலே எத்தனையோ விதமான மிருகங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான குணம். இவற்றுள் தந்திரத்துக்குப் பேர்போனது நரி. நரித் தந்திரம் என்று சொல்வார்களே அது இதுதான். மனிதர்களிலே சிலரைப் பார்த்து "அதோ போகிறாரே அவர் சாமான்ய பேர்வழி அல்ல குள்ள நரி! அவரிடம் எச்சரிக்கையாக நடந்துகொள்! ஏமாந்துவிடாதே" என்று சொல்வது உண்டு. நரித்தந்திரம் என்றால் என்ன? இதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமானால் சீனா தேசத்துக் கதையொன்றைக் கேட்க வேண்டும்.

ஒரு காட்டிலே ஒரு நரி இருந்தது. அங்கே ஒரு ஓநாயும் இருந்தது. இரண்டும் நல்ல நண்பர்கள். இந்த இருவரில் யாருக்கு என்ன கிடைத்தாலும் அதை இருவரும் பங்கு போட்டுச் சாப்பிடுவார்கள் அப்படி ஒரு ஒப்பந்தம் அவர்களுக்குள்ளே! ஒரு நாள் ஓநாய் வேட்டைக்குப் போன இடத்தில் அதற்கு இரண்டு முயல்கள் கிடைத்தது. அதை கொண்டு வந்து நரியிடம் கொடுத்து "இதை நன்றாகச் சமைத்துவை நான்போய் நம்முடன் சேர்ந்து சாப்பிடுவதற்கு ஒரு விருந்தாளியைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியே சென்றது.

அந்தக் காட்டில் ஒரு வயதான கரடி இருந்தது. அது இவர்கள் இரண்டு பேருக்கும் சினேகிதம். அதைக் கூட்டிக்கொண்டு வரத்தான் ஓநாய் சென்றது. கரடிதான் அன்று அவர்களுடைய பிரதம விருந்தாளி. ஓநாய் போனவுடன் நரி சமையலை ஆரம்பித்தது. இரண்டு முயல்களையும் அருமையாகச் சமைத்து முடித்தது.

கரடியை அழைக்கப்போன ஓநாய் இன்னமும் திரும்பவில்லை. ஆனால் அதுவரையும் நரியால் நாக்கைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எவ்வளவு நேரத்துக்கு முயல்கறியைப் பார்த்துக் கொண்டே இருக்க முடியும்? கறியிலே கொஞ்சத்தை எடுத்து வாயிலே போட்டுக்கொண்டது. ரொம்ப ருசியாக இருந்தது. கிடுகிடு வென்று கொஞ்ச நேரத்தில் ஒரு முயலைக் காலி செய்துவிட்டது. இன்னமும் ஓநாயும் கரடியும் வந்து சேரவில்லை. கொஞ்சநேரத்தில் மற்ற முயலும் நரியின் வயிற்றுக்குள்ளே போய்விட்டது. சமையல் செய்த கறிமுழுவதும் முடிந்துவிட்டது. அப்புறம் தான் நரி யோசிக்க ஆரம்பித்தது. ஓநாய் திரும்பிவந்து முயல்கறியை கொண்டு வா என்றால் என்ன செய்வது? இப்படியாக நரி யோசித்துக்கொண்டிருக்கும் போது ஓநாய் வேகமாக வந்து சேர்ந்தது.

"இதோபார் நமது பிரதம விருந்தினர் பின்னால் வந்து கொண்டிருக்கிறார் நீ முயலை எடுத்து தட்டிலே வை. அதைத் துண்டாக்குவதற்கு நான் கத்தியைத் தீட்டிக்கொண்டு வருகிறேன்! என்று ஓநாய் கூறிவிட்டு கத்தியை எடுத்துக்கொண்டு சென்றது. அந்த நேரத்திலே பிரதம விருந்தாளியான கிழக்கரடி வாயில் படியிலே கால்வைத்தது. நரி பார்த்தது... "ஐயோ பாவம்" என்றது "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று கரடி கேட்டது. "உனக்கு விஷயம் தெரியாதா? இன்று உனது இரண்டு காதுகளையும் வெட்டிப் பொரித்துச்சாப்பிட வேண்டுமென்பது ஓநாயின் திட்டம்" என்றது நரி. கரடி பயத்துடன் தனது காதுகளைத் தடவியபடி அப்படியா சொல்கிறாய்? என்றது. "அதோ பார்... ஓநாய் உனது காதுகளை வெட்டுவதற்காகக் கத்தியைத் தீட்டிக்கொண்டிருக்கிறது என்று நரி ஓநாயைக் காட்டியது "சரியான நேரத்திலே என்னைக் காப்பாற்றினாய் ரொம்ப நன்றி" என்று கூறியபடி கரடி தனது இரண்டு காதுகளையும் கையால் பொத்திக்கொண்டே ஓட ஆரம்பித்தது. அதன்பின் நரி, ஓநாயிடம் போனது "உனக்கு விஷயம் தெரியுமா?" என்றது. "என்ன ?" என்று கேட்டது ஓநாய் அந்தக் கரடியார் இரண்டு முயல்களையும் தூக்கிக்கொண்டு ஓடுகிறார் இது நியாயமா? என்றது நரி.

ஓநாய் கத்தியுடன் எழுந்து நின்றது. அடுத்த வினாடி கரடியைத் துரத்திக்கொண்டு ஓட ஆரம்பித்தது. கரடி திரும்பிப் பார்த்தது. கையிலே கத்தியுடன் ஓநாய்! கரடி மேலும் வேகமாக ஓடத் தொடங்கியது. ஓநாய் விடவில்லை. "இரண்டிலே ஒன்றை மட்டுமாவது கொடு... ஒன்றை மட்டுமாவது கொடு! நாங்கள் சாப்பிடுவதற்கு..." என்று கத்திக்கொண்டே ஓநாயும் ஓடிவந்தது. நரி இவை இரண்டையும் எப்படி ஓடவிட்டது பார்த்தீர்களா? இது தான் நரித் தந்திரம். மனிதன் அடுத்தவர்களை இருந்த இடத்திலிருந்தபடியே முட்டாளாக்குகிறான். நரியைவிட இவன் கெட்டிக்காரர்.

ஒருவர் ஒருநாள் என்னிடம் வந்தார் "சார்!... இங்கே யாரோ ஒரு முட்டாள் இருக்கிறாராம். யார் என்ன கேட்டாலும் 'தெரியாது' என்று சொல்லிக்கொண்டிருக்கிறாராம் உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டார். நான் உடனே 'தெரியாது' என்றேன். அப்படியானால் அது நீங்க்ள் தான் சார்!" என்று சொல்லிவிட்டு வேகமாக ஓட ஆரம் பித்தார். அந்த ஓநாய் மாதிரி என்னால் ஓட முடியவில்லை. பேசாமல் உட்கார்ந்துவிட்டேன். அப்படி அவர் ஒன்றும் தப்பாகச் சொல்லி விடவில்லையே!

தென்கச்சிகோ சுவாமிநாதன்

# கைதாவோரின் விபரங்களை வழங்க தகவல் மத்திய நிலையம் ஆரம்பம்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு

பாதுகாப்புப் படையினரின் தேடுதல் நடவடிக்கைகளின் போது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படுபவர்கள் தொடர்பான தகவல்களை அவர்களின் உறவினர்கள் உடனடியாக அறிந்துகொள்ளக்கூடிய தகவல் மத்திய நிலையம் ஒன்றை அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சு ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்படுபவர்கள் அனைவரது பெயர் விபரங்களையும் இந்த மத்திய நிலையத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சந்தேகத்தில் கைது செய்யப்படுபவர்கள் தொடர்பான விபரங்களை பொது மக்களுக்கு வழங்கும் இந்த தகவல் மத்திய நிலையம் வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணிநேரமும் இயங்கும்.

2670002 என்ற தொலைபேசி இலக் கம் மற்றும் 2779979 என்ற பக்ஸ் இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பொதுமக்கள் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

சந்தேகத்தில் கைதாவோரின் மனித உரிமைகளைப் பேணும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். அத்துடன் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படுபவர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாவிட்டால் அவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறும் ஜனாதிபதி பாதுகாப்பு தரப்பினருக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பயங்கரவாதிகளிடம் இருந்து பொது மக்களின் உயிர், உடமைகளை பாதுகாப்பதற்காக படையினர் மேற்கொள்ளும் இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக பொது மக்களுக்கு சில அசௌகரியங்கள் ஏற்படுவது குறித்து கவலை தெரிவித்துள்ள ஜனாதிபதி முடிந்த அளவில் அவ்வாறான பிரச்சினைகளை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# அப்பாவி தமிழ்மக்களின் விடுதலை குறித்து அமைச்சர் டக்ளஸ் ஜனாதிபதியுடன் பேச்சு

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியைச் சந்தித்து கைது செய்யப்பட்டிருக்கும் அப்பாவி தமிழ் மக்களின் நிலைமைகள் குறித்தும் அவர்களின் விடுதலை குறித்தும் விரிவான பேச்சுக்களை நடத்தியுள்ளதாக கட்சியின் தலைமைப்பணிமனை அறிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தலைநகர் கொழும்பில் புலிகளால் நடத்தப்பட்ட வன்முறைத்தாக்குதல்களினால் கைது செய்யப்பட்டிருப்போர் தொடர்பான நிலைமைகள் குறித்து செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ்தேவானந்தா ஜனாதிபதி ம்ஹிந்த ராஜபக்ஷவின் மேலான கவனத்திற்கு கொண்டுசென்றிருக்கின்றார்.

நேற்று முன்தினம் 3.12.2007 ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் சந்தித்திருந்த செய லாளர் நாயகம் டக்ளஸ் தேவா னந்தா இருவருடனும் விரிவான பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

புலித்தலைமையினால் திட்டமிடப்பட்டு நிகழ்த்தப்பட்டு வரும் வன்முறைத்தாக்குதலினால் அரசாங்கம் விசேட பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்த நிலைமைகளை தாம் கருத்தில் கொள்வதாகவும் ஆனாலும் இப்பாதுகாப்பு நடவடிக்கைகள் அப்பாவி மக்களின் மீது அவலங்களை சுமத்துவனவாக அமைந்துவிடக்கூடாது என்றும் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா எடுத்து விளக்கியிருந்தார்.

வெளிநாடு செல்லும் நோக்கிலும், மருத்துவ வசதிகள், வேலை வாய்ப்புக்கருதியும் மற்றும் புலித் தலைமையில் குறித்த வன்முறையினால் தமது சொந்த இடங்களில் வாழமுடியாத சூழலிலும் தலைநகர் கொழும்பில் ஆயிரக்கணக்கான தமிழ்பேசும் மக்கள் தற்காலிகமாக தங்கியிருந்து வருகின்றன. தவிர கொழும்பில் நீண்டகாலமாகவும் நிரந்தரமாகவும் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்துவருகின்றார்கள். இந்நிலையில் அப்பாவி மக்களை மனிதக்கேடயங்களாகப் பயன்படுத்தி அப்பாவி மக்களுடன் மக்களாக வன்முறைகளை நடத்தும் நோக்கில் புலிகளும் ஊடுருவி இருக்கும் நிலைமைகள் குறித்து இச்சந்திப்பின் போது ஆராயப்பட்டது.

இச்சந்திப்பின் போது கைது செய்யப்பட்டிருப்பவர்கள் அனைவரும் துரித விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அப்பாவி மக்களை உடன் விடுவிப்பதற்கான நடவடிக்கையில் உடனடி அக்கறை செலுத்துவதாகவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை, கைது செய்யப்பட்டிருப்பவர்களின் உறவினர்கள் தம்முடன் தொடர்பு கொண்டு விபரங்களை தெரிவிப்பதற்காக செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரையின் பேரின் தொலைபேசி இலக்கத்தினையும் ஈ.பி.டி.பியின் தலைமைப்பணி மனை மக்களுக்கு அறிவித்துள்ளது.

011-2593515 , அல்லது 011-2503467 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு

* கைதுசெய்யப்பட்டிருப்பவரின் முழுப் பெயர்?
* கைது செய்யப்பட்ட இடம்?
* அறிந்திருந்தால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடம், திகதி
* அடையாள அட்டை இலக்கம்?
* தொடர்பு கொள்வோரின் விபரம்?

எம்முடன் தொடர்பு கொள்வதற்கான சிபார்சுசெய்யப்பட்டிருந்தால் சிபார்சு செய்தவரின் பெயர்? போன்றவிபரங்களை தெரிவிக்குமாறு அறிவித்துள்ளது.

# இராசிபலன்

05.12-07

(கார்த்திகை 19, புதன்கிழமை)

ஏகாதசி பிற்பகல் 03.38 மணிவரை

சித்திரை பின்னிரவு 03.26மணிவரை

இராகுகாலம் 12.16-01.46 மணிவரை

சுபநேரம் 04.46-06.16 மணிவரை

ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | செல்வாக்கு, கரியா அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி, அபூர்வ சந்திப்பு. |
| இடபம் | சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், ஆரோக்கியம், போசனசுகம். |
| மிதுனம் | அஜீரணரோகம், வேலைச்சுமை, முயற்சி தாமதம், தனவிரயம். |
| கடகம் | உறவினர் சந்திப்பு, மனச்சஞ்சலம், ஆரோக்கியக்குறைவு,கல்வியில்ஆர்வம். |
| சிங்கம் | இனிய சம்பவம் கூட்டுமுயற்சி, வாக்கு மேன்மை, போசனசுகம். |
| கன்னி | விவாதம், கௌரவக்குறைவு, திடீர் நன்மை, பணவிரயம். |
| துலாம் | கற்பனை மிகுதி, சயனசுகம், நண்பர்கள் சந்திப்பு, போசனநன்மை. |
| விருச்சிகம் | தந்தைவழி உறவு, உணர்ச்சிவசப்படல், உஷ்ணவியாதி, பிரயாணம். |
| தனு | செய்தொழில் நன்மை, சீர்த்தி, காரிய நன்மை, விருந்துபசாரம். |
| மகரம் | அதிகாரம், தொழில் முன்னேற்றம், பெரியோர் உதவி, ஆரோக்கியம். |
| கும்பம் | ஆரோக்கியக்குறைவு, கட்டுப்பாடு, புதிய முயற்சி, ஆன்றோர் சந்திப்பு. |
| மீனம் | வாகனபயம், எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், போசனசுகம். |

வளவன்

# மலையகத்தில் புதிய கூட்டணி

எதிர்காலத்தில் தேர்தலை சந்திக்க புதிய கூட்டணி உரு வாகியுள்ளதாகத் தெரிகிறது. அதற்கான முயற்சியும் தேவையும் எழுந்துள்ளதாக அரசியல் தொழிற்சங்க வட்டாரங்களின் மூலம் அறிய முடிகிறது.

கடந்த வாரம் நுவரெலியாவில் நடைபெற்ற தொழிலாளர் தேசிய சங்கத்தின் 13ஆவது மாநாட்டின் போது இந்த கூட்டணி அமைவது உறுதியாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் மாநாட்டிற்கு பிரதியமைச்சர்கள் வடிவேல் சுரேஸ் , நவீன் திஸாநாயக்க, இலங்கைத்தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் எஸ்.சதாசிவம், மேலக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான பிரபாகணேசன் ஆகியோர்வருகை தந்திருந்தார்கள். இவர்களோடு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான பி.திகாம்பரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத்தெரிகிறது. எதிர்வரும் பொதுத்தேர்தலில் இந்த அமைப்புகள் ஒன்று சேர்ந்து பொதுவான வேலைத் திட்டத்தின் கீழ் போட்டியிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழிலாளர் தேசிய சங்கம், இலங்கைத்தொழி லாளர் ஐக்கிய முன்னணி, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் போன்றவற்றுக்கு கணிசமான அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள். எனவே தேர்தல் வருவதற்கு முன்னரே கூட்டணியைப் பலப்படுத்தும் உத்திகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (அ-5)

# 'புலிகளின் குரல்' மீதான தாக்குதல் யுனெஸ்கோ கடும் கண்டனம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகார பூர்வ வானொலியான 'புலிகளின் குரல்' வானொலி நிலையம் மீதான தாக்குதலை ஐக்கிய நாடுகள் சபையின் உப அமைப்புக்களில் ஒன்றான 'யுனெஸ்கோ' நிறுவனம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஐ. நா. சார்பில் ஊடகத்துறை மற்றும் கருத்துச் சுதந்திரம் தொடர்பான விடயங்களைக் கண்காணிக்கும் பிரதான அமைப்பாக 'யுனெஸ்கோ' செயற்பட்டு வருகின்றது. 'புலிகளின் குரல்' மீதான தாக்குதல் தொடர்பாக யுனெஸ்கோ அமைப்பின் தலைமைப் பொறுப்பாளர் கொய்சிரோ மற்சூரா கருத்து தெரிவிக்கையில்,

ஜெனீவா விதிகளின்படி பொதுமக்களுக்கு தகவல்களை வழங்கும் பொது ஊடகங்கள் அவை வெளியிடும் கருத்துக்கள் எந்த வகையாக இருந்தாலும் அதன்மீது இராணுவத் தாக்குதல்களை நடத்துவதற்கு அனுமதியில்லை.

ஊடகத்துறையினரையும் ஊடகங்களையும் பொதுமக்கள் சார்ந்தவையாகவே கருத வேண்டும் என்று ஜெனீவா விதி கூறுகின்றது. எனவே 'புலிகளின் குரல்' வானொலி நிலையம் மீதான தாக்குதலை இலங்கை அரசாங்கம் எது விதத்திலும் நியாயப்படுத்த வாய்ப்பில்லை.

இத்தகைய தாக்குதல்கள் மற்றும் ஊடகத்துறை சார்ந்தோர் படுகொலைகள் எதுவும் இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்விற்கு எது விதத்திலும் உதவப்போவதில்லை. எனவே அடிப்படை மனித உரிமை மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கு அரச அதிகாரிகள் மதிப்பளிக்க வேண்டும் என்றார். (அ-5)

# இரங்கல் தெரிவிக்கத் தடை விதித்த வழக்கு பதில் மனுத்தாக்கல் செய்ய அழைப்பு

(சென்னை)

தடை செய்யப்பட்ட இயக்கத்தினருக்கு ஆதரவாக இரங்கல் தெரிவிக்க பொலிஸார் விதித்துள்ள தடையை எதிர்த்து பெரியார் திராவிடர் கழகம் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தது.

இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம் தமிழக டிஜிபி பதில் மனுதாக்கல் செய்யுமாறு அமைப்பு அனுப்ப உத்தரவிட்டுள்ளது.

பெரியார் திராவிடர் கழகத்தின் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் சார்பில் வழக்கறிஞர்கள் எஸ்.துரைசாமி,வீ.இளங்கோவன் ஆகியோர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது,

கடந்த மாதம் 27ஆம் திகதி தமிழக டிஜிபி வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாக செயல்பட்டாலும் ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்தினாலும் பேனர்கள், போஸ்டர்கள் ஒட்டப்பட்டாலும் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்று எச்சரிக்கப்பட்டது.

டிஜிபி.யின் இந்த அறிவிப்பு சட்டத்துக்கு எதிரானது. விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு தலைவராக இருந்த சு.ப தமிழ்ச்செல்வன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு இரங்கல் தெரிவித்து பெரியார் திராவிடர் கழகம் தமிழகம் முழுவதும் பொதுக் கூட்டம், ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகிறது.

ஆனால் டிஜிபி.யின் அறிவிப்புக்குப் பின் இதுபோன்ற கூட்டங்களை நடத்த பொலிஸார் தடை விதிக்கின்றனர் . இதை மீறினால் பொலிஸார் கைது செய்கின்றனர்.

எனவே டிஜிபி.யின் அறிவிப்பை ரத்து செய்யவேண்டும் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜோதிமணி வரும் 18ஆம் திகதி டிஜிபி பதில் மனுத்தாக்கல் செய்யவேண்டும் என்று உத்தரவிட்டார். (அ-5)

# பணிப்புறக்கணிப்புக்கு உச்ச நீதிமன்று தடை

(கொழும்பு)

சுகாதார சேவை தொழிற் சங்கங்களினால் முன்னெடுக்கவிருந்த பணிப்புறக் கணிப்புப் போராட்டத்திற்கு உச்ச நீதிமன்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

சம்பள முரண்பாடு ஊழியர்களின் வரவின் இயந்திரப் பதிவு முறை மற்றும் ஊழியர்கள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகள் குறித்து அதிகாரிகளின் கவனத்தை ஈர்ப்பதற்காகவே சுகாதார ஊழியர்களின் 40 தொழிற் சங்கங்கள் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபடவிருந்தன.

எனினும் நோயாளி ஒருவர் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த கொழும்பு உச்ச நீதிமன்ற நீதியாளர் சிசிர ரத்நாயக்க சுகாதார ஊழியர்களின் பணிப்புறக் கணிப்புப் போராட்டத்திற்கு தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (அ-5)

# தேர் அமைக்கும் பணிகள் பூர்த்தியடையும் நிலையில்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் ஐயனாருக்கான சிற்பத்தேர் அமைக்கும் பணிகள் பூர்த்தியடையும் நிலையை அடைந்துள்ளன. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட சிற்பத்தேரின் பாகங்கள் பொருத்தும் பணி தற்போது நடைபெற்று வரு கிறது.

எதிர்வரும் மார்கழி திருவெம்பாவையை ஒட்டிய பஞ்சரத பவனியின் போது ஐயனார் புதிய சித்திரத்தேரில்பவனி வருவார்.

இதே போன்று நடராஜப் பெருமானுக்கான சித்திரத்தேர் கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்தே தேர்ப்பாகங்கள் கொண்டுவரப்பட்டு அமைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

## அவுஸ்திரேலிய பிரதமராக கெவின் பதவி ஏற்றார்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவில் சமீபத்தில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் பிரதமர் ஜான் ஹோவர்டு தோல்வி அடைந்தார்.

எதிர்க்கட்சியான தொழிற்கட்சி தலைவர் கெவின் ரட் வெற்றி பெற்றார்.

இதைத்தொடர்ந்து அவர் புதிய பிரதமராக பதவி ஏற்றுக்கொண்டார். பதவி ஏற்பு விழா கான்பேரா நகரில் நடந்தது.

அந்த நாட்டின் 26ஆவது பிரதமராக ரத். பதவி ஏற்றுக் கொண்டார் அவருக்கு கவர்னர் ஜெனரல் மைக்கேல் ஜெப்ரி பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

தொழிற்கட்சியின் துணைத்தலைவர் ஜூலியா கில்லார்டு துணைப்பிரதமராக பதவி ஏற்றார்.

இதைத்தொடர்ந்து மந்திரிகளும் பதவி ஏற்றுக்கொண்டனர். பதவி ஏற்புவிழாவில் கெவின் மனைவி தெரசா ரெய்ன் மற்றும் அவர் குழந்தைகள் கலந்துகொண்டனர். ஜூலியாவின் கணவர் டிம்மத்தீசன் தங்கை அலீசன் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர். (அ-5)

# எதிரும் புதிருமான நவாஸ் செரீப்பும் பெனாசீரும் திடீரென சந்திப்பு இணைந்து செயற்பட முடிவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஜனவரி 8ஆம் திகதி தேர்தல் நடக்க இருக்கிறது. இந்த தேர்தலில்



போட்டியிட முஸ்லிம் லீக் கட்சி தலைவரும் முன்னாள் பிரதமருமான நர்வஸ் செரீப் லாகூரில் வேட்புமனு தாக்கல் செய்து இருந்தார். ஆனால் அவர் மீது கிரிமினல் வழக்கு இருப்பதாக கூறி அவரது வேட்புமனுவை தேர்தல் கமிஷன் தள்ளுபடி செய்தது.

இன்னொரு முன்னாள் பிரதமரும் மக்கள் கட்சித் தலைவியுமான பெனாசீர் 3 தொகுதிகளில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்தத்தேர்தல் முறையாக நேர்மையாக நடக்காது என்று கூறி தேர்தலை புறக் கணிக்கப் போவதாக நாவஸ் செரீப் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் எதிரும் புதிருமான நாவஸ் செரீப்பும் பெனாசீரும் திடீரென சந்தித்துப் பேசினார்கள்.

இஸ்லாமபாத்தில் பெனாசீர் இல்லத்தில் இந்த சந்திப்பு நடந்தது. அப்போது தேர்தலை புறக்கணிக்கும் படி பெனாசீரிடம் நவாஸ் கேட்டுக் கொண்டார்.

ஆனால் அது பற்றி இறுதி முடிபு எதுவும் பெனாசீர் அறிவிக்கவில்லை. இந்த சந்திப்பின் போது அதிபர் முஷரப்புக்கு எதிராக போராட்டத்தை தீவிரப்படுத்துவது என்று பெனாசீரும் நவாஸும் முடிவு செய்தனர் .

தேர்தல் அமைதியாக நேர்மையாக நடக்க வாய்ப்பு இல்லை என்றால் தேர்தலை புறக் கணிப்பது என்று முடிபு செய்யப்பட்டது. இது பற்றி முடிபு செய்ய இரு கட்சிகள் சார்பில் 8 உறுப்பினர் கூட்டு குழு அமைக்கப்பட்டது.

இந்த குழு அதிபர் முஷரப்புக்கு சில நிபந்தனைகளை விதிக்கும். அந்த நிபந்தனைகள் என்ன என்பது 2 நாளில் அறிவிக்கும்.



நிபந்தனைகளை முஷரப் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் ஏற்காவிட்டால் தேர்தலை 2 கட்சிகளும் புறக்கணிக்கும். வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து நீதிமன்றத்தில் அப்பீல் செய்யத் போவ தில்லை என்று நவாஸ் செரீப் கூறியுள்ளார். (அ-5)

# இளமைக்குத் திரும்ப இரண்டு வாரங்கள் விஞ்ஞானிகளின் பரிசோதனை வெற்றி

(சிகாகோ)

வயதான எலியின் தோலை மீண்டும் இளமையாக மாற்றி விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர். இரண்டு வார சிகிச்சையில் குறிப்பிட்ட ஒரு மரபணுவை செயல்படவிடாமல் தடுத்தால் மீண்டும் இளமை திரும்பிவிடுகிறது.

முதுமையை தூண்டி தோலில் கடினத் தன்மையையும் சுருக்கத்தையும் ஏற்படுத்தக் கூடிய மரபணுவை செயலிழக்கச் செய்தால் முதுமையே தட்டாது என்று கண்டறியப்பட்டுள்ளது. மரபணு ரீதியாக மாற்றியமைக்கப்பட்ட எலியின் மூலம் இந்த சோதனை நடத்தி வெற்றி காணப்பட்டது.



தோல் மட்டுமின்றி திசுக்களும் இளமைக்கு திரும்பிவிடுகின்றன். இது மனிதர்களிடம் செய்வதற்கு இன்னும் நீண்ட காலமாகும். என்றாலும் இளமையை மீட்க முடியும் என்ற நம்பிக்கையை விஞ்ஞானிகளிடம் ஏற்படுத்தி உள்ளது. இதற்கு முன்கிட்டத்தட்ட உணவே இல்லாமலும் இளம் விலங்கில் இருந்து முதியவிலங்குக்கு தொடர்பு சுழற்சி ஏற்படுத்துவதன் மூலமும் கடினமான விஷயங்கள் மூலம் இளமையை மீட்பது குறித்து பரிசோதனைகள் நடத்தப்பட்டன. தற்போது எளியமுறையில் இளமையை மீட்க முடியும் என்பது தெரியவந்துள்ளது.

ஸ்டான்போர்டு மருத்துவப் பல்கலைக் கழகத்தை சேர்ந்த ஹாவர்டு சங் தலைமையிலான குழு இந்த சோதனையை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது. இந்த முறையின் மூலம் முதுமையை அடையும் போது குறிப்பிட்ட மரபணு செயலிழக்கும் வகையில் மரபணு மாற்றப்பட்ட எலி இந்த சோதனைக்கு பயன்படுத்தப்பட்டது. இந்த எலி முதுமையை அடையும் போது குறிப்பிட்ட இரசாயனம் உடலின் சில பகுதிகளில் மட்டும் தடவப்பட்டது. இரண்டு வாரத்தில் இரசாயனம் தடவப்பட்ட பகுதியில் உள்ள தோல் இளமைக்கு திரும்பியது. இராசாயனம் பூசப்படாத பகுதி முதுமையாகவுள்ளது. இளமைக்கு திரும்பிய தோல் பகுதியின் திசுக்களும் இளமைக்கு திரும்பியிருந்தன. உடல் முழுவதும் இந்த மரபணுக்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட செயல்பாடுகளுக்கு இந்த மரபணுக்கள் அவசியம் தேவை. எனவே உடல் முழுவதும் இரசாயனம் பூசப்பட்டால் மரணம் கூட ஏற்படும் என்கிறார் சங். எனவே குறிப்பிட்ட பகுதியை மட்டுமே இம்முறையின் மூலம் இளமைக்கு மீட்க முடியும். இந்த மரபணுக்கள் உடலின் எதிர்ப்பு சக்தி மற்றும் அணுக்களின் பல்வேறு செல்பாடுகளுக்கு உதவுகின்றன. எனவே குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே இதன் செயல்பாடுகளை

# வாகனங்களுக்கு 'இன்ஜின் ஒயிலுக்கு' பதிலாக தேங்காய் எண்ணெய்

(கேரளா)

இன்ஜின் ஒயிலுக்கு பதிலாக வாகனங்களில் தேங்காய் எண்ணெய்யைப் பயன்படுத்துவது பற்றிய ஆய்வு இறுதிக் கட்டத்தில் உள்ளது.கேரளா, மலப்புறம் விவசாய

## உலக தரிசனம்

தொழில் நுட்பக் கல்லூரியில் தேங்காய் எண்ணெய் பற்றிய ஆய்வு நடந்துவருகிறது. ஐந்து ஆண்டுகளாக நடக்கும் இந்த ஆய்வு முடிவுகள் இன்னும் ஆறு மாதங்களில் வெளியிடப்படுகிறது.

கேரள முச்சக்கரவண்டிச் சாரதிகள் பலர் தங்கள் முச்சக்கரவண்டி இயந்திரத்திற்கு தேங்காய் எண்ணெயை பயன்படுத்துகின்றனர். இதை கேள்விப்பட்ட கேரள அரசு இது பற்றி முழுமையான ஆய்வு நடத்த விவசாய தொழில்நுட்பக் கல்லூரியைக் கேட்டுக் கொண்டது. பேராசிரியர் மனோஜ் மாத்யூ தலைமையிலான ஆய்வுக்குழ் இரண்டு முச்சக்கர வணடிகளை கொண்டு ஆய்வு வடத்தீ வருகின்றனர். ஒரு ஆட்டோவில் தேங்காய் எண்ணெயும் மற்றதில் இன்ஜினில் ஒயிலும் பயன்படுத்தப்படுகிறது. பராமரிப்பு இயந்திர தேய்மானம் கார்பன் அளவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது இவ் ஆய்வு. இதில் பல முக்கிய முடிவுகள் கிடைத்துள்ளன. தேசிய போக்குவரத்து கழக அனுமதியுடன் ஆய்வு முடிவு விரைவில் வெளியிடப்படுகிறது. (அ-5)

# சாதனை நாயகன் முரளி

உலகில் அதிக டெஸ்ட் விக்கெற்றுகளை வீழ்த்தியவராக இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் சாதனை படைத்துள்ளார்.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணியுடனான முதலாவது டெஸ்டின் 3ஆம் நாள் ஆட்டமான நேற்றுமுன்தினம் அவ் அணியின் சிறந்த நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரரான போல் ஹொலின்வூட்டை நேரடியாக "போல்ட்" செய்து ஆட்டமிழக்கச் செய்ததன் மூலமே முரளி இச்சாதனை நிலை நாட்டினார்.

இதன் பிரகாரம் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்னின் டெஸ்ட் கிரிக்கெற்றில் 708 விக்கெற்றுக்கள் எடுத்து படைத்திருந்த சாதனையை தற்போது முறியடித்துள்ள முரளி டெஸ்ட் போட்டிகளில் இதுவரை 710 விக்கெற்றுக்களை வீழ்த்தியுள்ளார். 35 வயதான முரளி தான் விளையாடிய 116வது டெஸ்ட் போட்டி இதுவாகும்.

## டெஸ்டில் அதி கூடிய விக்கெற் வீழ்த்தியவர்கள்


| வீரர் | அணி | போட்டி | விக்கெற் |
|---|---|---|---|
| முரளி | இலங்கை | 116 ✠ | 710 |
| வோர்ன் | ஆஸி | 145 | 708 |
| கும்ளே | இந்தியா | 120✠ | 576 |
| மெக்ராத் | ஆஸி | 124 | 563 |

## கடந்து வந்த பாதை

1972ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் திகதி கண்டியில் முத்தையா- லக்ஷ்மி தம்







பதிகளுக்கு மகனாகப்பிறந்த முரளிதரன் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28ஆம் திகதி அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக கொழும்பு பிறேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் சர்வதேச கிரிக்கெற் அரங்கிற்குள் காலடி வைத்தார்.



சர்வதேச கிரிக்கெற்றில் சாதனைகளுக்கு நிகராக சர்ச்சைகளையும் சந்தித்த ஒரே வீரர் இவராகத்தான் இருக்கும். எனினும் தனது தளராத மன உறுதியினால் முத்திரை பதித்தார்.

1995ஆம் ஆண்டு இலங்கை அணியின் அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் இவர் பந்தை எறிவதாக நடுவர் டெர்ல ஹேயர் குற்றம் சாட்டினார்.

பின்னர் 1996ஆம் ஆண்டு நடந்த பரிசோதனையில் பந்துவீச்சு முறை சரியென நிரூபனமானது. 1998, 2004ஆம் ஆண்டுகளில் இதுபோல் சர்ச்சைகளில் மீண்டும் சிக்கினார்.

இதையடுத்து சர்வதேச கிரிக்கெற் சபை (ஐ.சி.சி) இவருக்கு மீண்டும் பரிசோதனைகள் செய்தது. இதில் இவருக்கு ''கிறீன்சிக்னல்'' கிடைத்தது. இதனால் இவர் மீதான களங்கம் நீங்கி தொடர்ந்து சிறப்பாக செயற்பட்டு பல சாதனைகளுக்கு சொந்தக் காரரானார். முரளி உலகில் அதிக டெஸ்ட் விக்கெற் வீழ்த்தியோர் வரிசையில் முதல் இடத்தை பிடிக்கும் சந்தர்ப்பம் இதுவல்ல. இதற்கு முன்னர் 2004 ஆம் ஆண்டில் ஹராரேயில் நடந்த தனது 69ஆவது டெஸ்டில் 519 ஆவது டெஸ்ட் விக்கெற்றைவீழ்த்தி கொட்னி வோல்ஷ் படைத்திருந்த உலக சாதனையை முறியடித்தார்.

இதனைத்தொடர்ந்து ஹேறன் வோர்ன் கெயின்ஸிஸ் இலங்கைக்கு எதிரான 527ஆவது விக்கெற்றை வீழ்த்தி முரளியின் சாதனையை முறியடித்தார். இந்நிலையில் 2004ஆம் ஆண்டில் காலியில் நடந்த போட்டியில் முரளி தனது 528ஆவது விக்கெற்றை வீழ்த்தி சாதனை முறியடித்தார்.

அதே ஆண்டில் ஒக்டோபர் மாதம் சென்னையில் நடந்த இந்தியாவுக்கு எதிரான போட்டியில் தனது 532 ஆவது விக்கெற்றை வீழ்த்திய ஷேன்வோர்ன் புதிய உலக சாதனையை படைத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்தே முரளி தற்போது ஓய்வு பெற்றுள்ள வோர்னின் சாதனையை முறியடித்தார்.

தற்போது முரளி படைத்துள்ள உலக சாதனை நீண்டகாலம் நிலைத்திருக்க அதிக வாய்ப்புள்ளது. ஏனெனில் தற்போது விளையாடிவரும் வீரர் எவரும் முரளியை அண்மித்த விக்கெற்றுக்களை வீழ்த்தவில்லை என்பது சிறப்பு அம்சமாகும்.

### வெற்றிநாயகன்

இவரின் சுழலினால் இலங்கை அணி இதுவரையில் 45 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது.

இவ்வெற்றி கொண்ட 45 போட்டிகளிலும் இவர் 373 விக்கெற்(சாராசரி 8: 28 விக்கெற் கைப்பற்றியுள்ளார்.

### வாழ்த்துக்கள்

முரளி தனது சொந்த மண்ணில் சாதனையை தனது மனைவி, மகன், பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள் ,ரசிகர்கள் முன்னிலையில் எட்ட முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

உலக சாதனை முறியடித்ததும் அரங்கு முழுவதும் பட்டாசு வெடிக்கப் பட்டதோடு.ரசிகர்கள் அனைவரும் கர கோசம் எழுப்பி வாழ்த்து தெரிவித்தனர்.

### வோர்ன் வாழ்த்து

டெஸ்ட் அரங்கில் அதிக விக்கெற் வீழ்த்திய வீரர் என்ற சாதனையை நிகழ்த்திய முரளிதரனுக்கு அவுஸ்ரேலிய சுழல் யாம்பவான் வோர்ன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இவர் கூறுகையில், எனது சாதனையைத் தகர்த்த முரளிதரனுக்கு வாழ்த்துக்கள். ஆயிரம் விக்கெற்றுக்கள் வீழ்த்துவதே இலட்சியமாக கொண்டுள்ள இவர் இந்த இலக்கை நிச்சயமடைவார்.

✠ டெஸ்ட் அந்தஸ்து பெற்றுள்ள எவ்வொரு அணிக்கு எதிராகவும் 50 விக்கெற் கைப்பற்றியுள்ள ஒரே வீரர் இவர்தான்.

✠ சொந்த மண்ணில் இங்கிலாந்து அணிக்கு எதிரான 50ஆவது விக்கெற்றாக மைக்கல் வோன் வீழ்ந்தார். இதுவரையில் சொந்த மண்ணில் பங்களாதேஷ், தென்னாபிரிக்கா மற்றும் சிம்பாவே அணிக்கு எதிரான 50விக்கெற் கைப்பற்றியுள்ளார்.

✠ 20முறை ஒரே டெஸ்ட் போட்டியில் 10விக்கெற் வீழ்த்தியுள்ளார். வோர்ன் இந்த மைக்கல்லை 10 முறை மட்டுமே எட்டியுள்ளார்.

✠ ஒரே ஆண்டில் 75 மற்றும் அதற்கு கூடுதலான விக்கெற் கைப்பற்றிய ஒரே வீரர் இவர்தான். 2000,2001மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் இந்தச் சாதனையைப் படைத்தார்.

பல வருடங்களாக இலங்கை அணியில் சிறந்த வீரராக வலம் வருகிறார் என்றார்.

### சரியான தருணம்

முரளிதரன் கூறுகையில், சாதனை படைக்க இது தான் சரியான தருணம். எனது சொந்தமண் என்பதுடன் நண்பர்கள், உறவினர்கள் , மனைவி மற்றும் பலர் இங்குள்ளனர். அவர்களுக்கு முன்னாள் சாதனை படைத்தது மகிழ்ச்சி.


1998ஆம் ஆண்டு ஓவலில் நடந்த போட்டியில் 16 விக்கெற் வீழ்த்தியதை மறக்க முடியாது என்றார்.

### ஆயிரம் விக்கெற் நோக்கி

டெஸ்ட் கிரிக்கெற் ஆயிரம் விக்கெற் வீழ்த்திய முதல் வீரர் என்ற சாதனையை முரளிதரன் படைக்க உறுதுணையாக இருப்பேன் என அவரது மனைவி மதிமலர் தெரிவித்துள்ளார்.

இவர் கூறுகையில், ஆயிரம் விக்கெற் வீழ்த்திய வீரர் என்ற சாதனை படைக்க அவருக்கு உறுதுணையாக இருப்பேன். அவருக்கு உலகமெங்கும் ரசிகர்கள் உள்ளனர் என்றார்.





### ஆஸி. பாராட்டு

டெஸ்ட் கிரிக்கெற்றில் அதிக விக்கெற்றுகள் வீழ்த்தியவர் என்ற பெருமையை இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் பெற்றுள்ளது பாராட்டுக்குரியது என்று கிரிக்கெற் ஆவுஸ்திரேலியாவின் தலைமை நிர்வாகி ஜேம்ஸ் சுதர். லாண்ட் கூறியுள்ளார்.

முரளிதரனின் பந்துவீச்சை ஏற்கனவே கிரிக்கெற் அவுஸ்ரேலியா விமர்சித்துள்ள போதிலும் அதுபற்றி தற்போது பேசுவது சரியானது அல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெற்றில் அவுஸ்ரேலிய வீரர் ஷேன் வோர்னின் சாதனையை முறியடித்துள்ள முத்தையா முரளிதரனின் சாதனையை பாராட்ட வேண்டிய தருணம் இது என்றும் அவர் கூறியுள்ளார்.

### ஜனாதிபதி வாழ்த்து

உலக சாதனை படைத்த முரளிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார். அத்துடன் உலக சாதனை படைத்த முரளிக்கு இலங்கை கிரிக்கெற் சபை 8மில்லியன் ரூபா அளவு பெறுமதியான நவீன ரக மோட்டார்க் கார் ஒன்றை வழங்க திட்டமிட்டுள்ளது. இந்த பரிசு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கையால்

**வட்டு அமிர்தன்**

வரும் 7ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. இது தவிர உலக சாதனை படைத்த முரளியின் ஞாபகார்த்தமாக இலங்கை தபால் திணைக்களம் தபால் தலை ஒன்றையும் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

✠

# ஜிம் பிறவுண் அடிகளார் காணாமல் போனது தொடர்பில் அரசாங்கம் நேர்மையாகச் செயற்படவில்லை

## யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் குற்றச்சாட்டு

யாழ்.ஜிம் பிறவுண் அடிகளார் காணாமல் போனது தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நேர்மையாகச் செயற்படவில்லை என்று யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் குற்றஞ்சாட்டியுள்ளார். கிளிநொச்சியில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசனை கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் அவர் கூறியதாவது,

யாழ்ப்பாணத்துக்கான ஏ-9 பாதை மூடப்பட்டு 2 ஆண்டுகளாகிவிட்டன. மக்களினது நாளாந்த வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. ஏ-9 பாதையை திறந்தால் தான் அங்கு மக்கள் உயிர்வாழ முடியும். அத்தியாவசியப் பொருட்களினது விலை கடுமையாக உயர்ந்துவிட்டது. ஒரு தேங்காயின் விலை ரூ.80 ஆகிவிட்டது. மின்சாரம் சீராக விநியோகிக்கப்படுவதில்லை.

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. யாழ்.குடாநாட்டில் பணப் புழக்கமும் குறைந்துவிட்டது. வேலை வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறுவதில்லை. இலங்கையில் இராணுவ ரீதியாக அமைதியை உருவாக்க முடியாது. அத்தகைய வழிமுறைகளை மேற்கொண்டால் மக்கள்தான் அதிகமாக பாதிக்கப்படுவர். ஜனாதிபதியை ஒவ்வொரு முறையும் சந்திக்கின்ற போதும் மிகுந்த மரியாதையோடு எம்மை நடாத்தி நாங்கள் சொல்வதைக் கேட்டுக் கொள்வார். ஆனல் அவர் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில்லை.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் அனுராதபுரம், மன்னார் ஆயர்களுடன் நாமும் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து நிலைமைகளை விளக்கினோம். பேச்சுக்களின் மூலமாகத் தீர்வுகாண அறிவுறுத்தினோம். பேச்சுக்களினூடேதான் தீர்வுகாண முடியும் என்பதே எமது நத்தார் நாள் செய்தியாகும்.

வத்திக்கானின் பிரதிநிதி கடந்த வாரம் எம்முடன் உரையாடியபோது யாழ்.நிலைமைகளைக் குறிப்பிட்டோம். விமான படையின் குண்டுத் தாக்குதல்கள் குறித்தும் விளக்கினோம். கொழும்பிலிருந்து இரண்டு வாரங்களுக்கு முன்னதாக இலங்கைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் யாழில் என்னை சந்தித்தார். ஜிம்பிறவுண் அடிகளார் காணாமல் போனமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதாக தெரிவித்த அந்த அதிகாரிக்கு தமிழும் ஆங்கிலமும் தெரியவில்லை. சிங்களம் மட்டுமே அறிந்தவர் அவர். சிங்களம் மட்டும் அறிந்த அவரால் எப்படி விசாரணைகளை முன்னெடுக்க முடியும்? தடயங்களைச் சேகரிக்க முடியும்?

அனைத்துலகத்தின் அழுத்தங்களுக்காக, ஒரு கண்துடைப்புக்காக மட்டுமே விசாரணைகளை அரசாங்கம் மேற்கொள்கிறது. ஜிம் பிறவுண் அடிகளார் காணாமல் போனமை தொடர்பில் அரசாங்கமானது நேர்மையோடும் அக்கறையோடும் செயற்படவில்லை என்றார். (அ-5)





யாழ்.இலக்கிய வட்டத்தினால் 2ஆம் திகதி நடாத்தப்பெற்ற 'செங்கை ஆழியான் நாவல்கள் ஒரு திறனாய்வு நோக்கு' எனும் நூல் வெளியீட்டு விழாவில் நாவல் ஆசிரியர் செங்கை ஆழியானுக்கு பேராசிரியர் சத்தியசீலன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், நூலாசிரியர் கந்தையா முருகதாசன் உரையாற்றுவதையும், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம.இரகுநாதன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## சமூகம் தரவும்

2007 யூன் மாதம் பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிற்சியை முடித்து வெளியேறிய ஆசிரிய மாணவர்கள் பரீட்சை நிலையம் தொடர்பாக தீர்மானிப்பதற்காக இன்று காலை 10 மணிக்கு கலாசாலைக்கு சமுகம் தருமாறு கலாசாலை அதிபர் த.காங்கேசபிள்ளை அறிவித்துள்ளார். (அ)

### சான்றிதழ் வழங்கல்

பலாலி ஆசிரியர் கலாசாலையில் 2001யூலையிலிருந்து 2003 யூலை 30 வரையான கல்வி ஆண்டுகளுக்கான ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், விவசாயம், வர்த்தகம், உடற்கல்வி நெறிகளுக்கான பரீட்சை பெறுபேற்று மூலச்சான்றுதழ்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. உரியவர்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் த்.காங்கேசபிள்ளை அறிவித்துள்ளார். (அ)

## மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவு

சமூக சேவை திணைக்களத்தால் மாதந்தோறும் வறுமைக் கோட்டில் வாழும் மக்களுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவிப்பணம் மற்றும் நோய்களுக்கான உதவிப் பணம் ஆகியன தற்பொழுது அரச அலுவலகங்களில் வழங்கப்பட்டு வருகின்றது.

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச மக்களுக்கான கொடுப்பனவு ஊர்காவற்றுறை தபாலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்பு சுருவில் வீதியில் இயங்கி வந்த அஞ்சல் அலுவலகம் தற்பொழுதுமக்கள்வங்கிக்குஅருகாமையில் இயங்கிவருவது குறிப்பிடத் தக்கது. (அ-72)

### வருடாந்த மகோற்சவம்

கோண்டாவில்அருள்மிகு சுபீஸ்ச ஐயப்பன் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு நாகராஜா பூசையும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு மகசீ சங்காரமும் (வேட்டைத் திருவிழா) 10ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 2 மணிக்கு மஞ்சமாதா பூசையும் நடைபெறும். (அ)

# யாழ்ப்பாணத்தில் நாளாந்தம் 6 பேர் படுகொலை; மகேஸ்வரன் கவலை

யாழ்ப்பாணத்தில் நாளாந்தம் ஆறு பேரை ஆயுதக்குழுக்கள் படுகொலை செய்து வருவதுடன் வீடுகளிலும் கொள்ளையடித்து வருகின்றனர் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராசா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் படுகொலைகள் தொடர்பான தகவல்களை நான் இதுவரை வெளியிடாது தவிர்த்து வந்திருந்தேன். நான் இதனை நீண்டகாலம் பேசவும் இல்லை. ஆனால் இன்று அதனை தெரிவிக்கின்றேன்.

யாழ்ப்பாணத்தில் குறைந்தது 6 பொதுமக்களாவது நாளாந்தம் கொல்லப்பட்டு வருகின்றனர். இந்த படுகொலைகளைச் செய்யும் குழுக்களுக்கு வர்த்தகர்களும், உயரதிகாரிகளும் நிதி உதவிகளை வழங்கி வருகின்றனர். இது இறைவன் மீது ஆணையாக உண்மையான தகவல் (அவர் கடவுளின் உருவத்தையும் கையில் பிடித்திருந்தார்)

இளம் பெண்கள் உள்ளிட்ட 400 பொது மக்கள் கைது செய்யப்பட்டு பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு உணவு மற்றும் அன்றாட கடமைகளை செய்வதற்கான வசதிகள் கூட செய்து கொடுக்கப்படவில்லை. உடுத்த உடையுடனேயே இளம் பெண்கள் அங்கு தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். அவர்களின் நிலைமை மிகவும் மோசமானது. அங்கு கழிப்பறை வசதிகளும் இல்லை என்றார். (அ-5)

## தூக்க நோயினால் கோழிகள் இறப்பு

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேசத்தில் கோழிகளுக்கு தூக்க நோய் ஏற்பட்டு கோழிகள் இறப்பதாக கோழிப்பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த வாரம் கரம்பன் பகுதியில் சிலகோழிகள் இறந்துள்ளதாக தெரியவருகின்றது.

கோழி வளர்ப்புக்கு வறுமைக் கோட்டில் உள்ளவர்களுக்கு இருபதினாயிரம் ரூபாவும் கோழிக் கூடும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ-72)

### பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆதலால் இப்பகுதிக்குட்பட்ட சகல திணைக்கள தலைவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-19)

### சின்னம் சூட்டும் வைபவமும் பாராட்டு விழாவும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தின் குருளை சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவமும் 2007ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் உயர் புள்ளிபெற்ற மாணவர்களுக்கான பாராட்டுவிழாவும் இன்று புதன்கிழமை மு.ப 10மணிக்கு வித்தியால அதிபர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா.இரகுநாதனும் சிறப்பு விருந்தினராக ஹாட்லி கல்லூரி முன்னாள் பிரதி அதிபர் ந.குணசீலனும் கலந்து கொள்வார்கள். (அ-19)

### பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் நினைவு தினமும்

(அல்வாய்)

கரவெட்டி கரணவாய் பொன்னம்பல வித்தியாலய பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் நினைவு தினமும் எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் த.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சட்டத்தரணி ஏ.கே நடராசா கலந்துகொள்வார். அமரர்களான பொன்.கணபதிப்பிள்ளை மரகதவல்லி தம்பதியினரின் நினைவுப் பேருரையை குப்பிளான் ஐ.சண்முகலிங்கம் நிகழ்த்துவார். திருமதி தயாநிதி நடராசா பரிசில்களை வழங்குவார். (அ-19)

### ஒளி விழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

எழுவைதீவு முருகவேல் வித்தியாலய வருடாந்த ஒளிவிழா நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கிறிஸ்தவ மாணவர் மன்ற பொறுப்பாசிரியர் செல்வி அ.மரியயுலிற்றா தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தீவகக் கல்விவலய கிறிஸ்தவ சமய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எஸ்.திருஞானசீலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ச)

★ ★ ★

அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் ஒளி விழா திருமதி பிலோமினா ஜோர்ஜ் ஞாபகார்த்த மண்டபத்தில் பாடசாலை அதிபர் ம.ஜெயவரதராஜா தலைமையில் நாளை காலை 9 மணிக்கு திருப்பலிப் பூசையுடன் ஆரம்பமாகும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா. இரகுநாதனும் சிறப்பு விருந்தினராக சக்கோட்டை பங்குத்தந்தை அருட்திரு ம.பத்திநாதரும் கலந்துகொள்வார்கள்.

★ ★ ★

ஊர்காவற்றுறை புனித -மரியாள் வித்தியாலய மண்டபத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிபர் அருட்ச கோதரி அ. எலிசபேத் தலைமையில் ஒளிவிழா நடைபெறவுள்ளது.

பிரதமவிருந்தினராக பங்குத் தந்தை அருட்பணியாளர் எக்ஸ். டபிள்யூ.ஜேமிஸ் அடிகள் கலந்துசிறப்பிப் பார்கள். (அ-72)

### உலக உணவுத்திட்ட நிவாரண விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சகல கிராம அலுவலர்கள் பிரிவுகளிலும் உலக உணவு திட்ட நிவாரண விநியோக அட்டைகள் கிராம அலுவலர்களால் வழங்கப் பட்டு வருகின்றன.

நவம்பர் மாதத்திற்கான நிவார விநியோகம் நடைபெறுவதால் உடனடியாக கிராம அலுலர்களிடம் இருந்து உலக உணவுத்திட்ட நிவாரண அட்டையினை பெற்று நிவாரணத்தினை பல நோக்கு கூட்டுறவு சங்கங்களில் பெற்றுக் கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)

## தையல்பயிற்சி வகுப்புகள்

தென்மராட்சி பிரதேச மகளிர் அபிவிருத்திப் பிரிவினரால் 2008 ஆம் ஆண்டு நடாத்தப்படவுள்ள பிரதேச மட்ட தையல் பயிற்சி வகுப்புகளில் பயிலுநராக பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலரிடமிருந்து பெற்று எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலாளர் ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

அத்துடன் மாவட்ட தையல் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள விரும்புவோர் பிர தேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளார். (அ)

ஒடப் பயந்தவர்களை 'தைரியசாலிகள்' என்று எண்ணியதும் உண்டு.

– இங்கிலாந்து

வலம்புரி

## வடக்கு கிழக்கு தமிழ் இளைஞர்களுக்கு மலையக எம்.பிக்கள் துரோகமிழைத்து விட்டனர்

தென்பகுதியில் கைதான மலையக தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

தமிழ் இளைஞர்களின் கைது தொடர்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோதே கைது செய்யப்பட்ட மலையக தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வதாக ஜனாதிபதி உறுதி அளித்ததாக இரு கட்சிகளும் தெரிவித்துள்ளன.

கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வதில் மலையகம், வடக்கு, கிழக்கு என்ற பாகுபாடு பார்க்கப்படுவது ஆச்சரியமான விடயமாகும்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களை விசாரிப்பது, விசாரணையில் அவர்கள் எந்தத் தவறும் இழைக்கவில்லையாயின் அவர்களை விடுதலை செய்வதே நீதியாகும்.

இதைவிடுத்து கைது செய்யப்பட்ட மலையகத் தமிழர்களை விடுதலை செய்ய ஜனாதிபதி உத்தரவிடுவது உள்நோக்கம் கொண்டதாகும். அதாவது வரவு செலவுத்திட்டதின் மூன்றாவது வாக்கெடுப்பில் மலையக நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை பெறுவதற்காகவே மலையக இளைஞர்களை விடுதலை செய்வதாக ஜனாதிபதி கூறி இருக்கலாம்.

சிலவேளை தமிழ் இளைஞர்களை ஆயிரக் கணக்கில் கைது செய்ததுகூட, வரவு செலவுத் திட்டதின் மீதான வாக்கெடுப்பில் மலையக நாடாளுமன்ற உறுப்பினர்களை கைக்குள் போடுவதற்கான நடவடிக்கையாகவும் இருக்கலாம்.

எதுவாயினும் மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சுயஇலாபம் கருதி தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்துவிட்டனர்.

காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் முதல் தற்போதைய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் வரை அரசியல் பச்சோந்தித்தனம் உடையவர்களாக இருப்பது தமிழினத்திற்கு பெரும் சாபக்கேடாகும்.

கைது செய்யப்பட்ட மலையக இளைஞர்களை விடுதலை செய்வதாக ஜனாதிபதி உறுதியளித்ததும் தமிழ் இளைஞர்களின் கைது தொடர்பில் நாடாளுமன்றில் நடந்த விவாதத்தின் போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகளும் மலையக மக்கள் முன்னணியின் பிரதிநிதிகளும் நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகவில்லை.

இதிலிருந்து மலைக நாடாளுமன்ற உறுப்பினர்களின் சுய அரசியல் இலாபம் வெளிப்படுகின்றது.

தமிழினத்தை கூறுபோட்டு பிரதேச–பிராந்திய–மாகாண ரீதியில் வகைப்படுத்தி பிரித்தாளும் தந்திரத்திற்கு தமிழ்த்தலைவர்கள் துணைபோனதன் காரணமாகவே இன்றுவரை தமிழினம் அடிமைப்பட்டு துன்பப்படுகின்றது.

மலையகத் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வதாக ஜனாதிபதி உறுதியளிக்கும்போது, வடக்கு கிழக்கு தமிழ் இளைஞர்களின் விடுதலை எப்போது என்ற கேள்வியை எழுப்பியிருப்பது இன உணர்வின் பாற்பட்டது.

ஆனால், அதனை மலையகத் தலைவர்கள் கேட்கவில்லை. மாறாக அவர்கள் தமது சுயலாபத்தையே மையமாக வைத்து செயற்படுகிறார்கள். இத்தகைய பச்சோந்தித்தனம் இருக்கும் வரை தமிழர்பாடு திண்டாட்டமே.

## நிரந்தரமான வீதிச்சோதனை சாவடிகளினால் மக்களின் நடமாடும் சுதந்திரம் மீறப்படுகின்றது

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

நிரந்தரமான வீதிச்சோதனைச் சாவடிகள் சட்டத்துக்கு புறம்பானது என்பதுடன் அவ்வாறான வீதிச் சோதனை சாவடிகளினால் பொதுமக்களின் நடமாடும் சுதந்திரம் மீறப்படுவதாக உயர் நீதிமன்றம் திங்கட்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

குளிரூட்டி தொழில்நுட்பவியலாளர் ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே பிரதம நீதியரசர் சரத் என். சில்வா மேற்கண்ட தீர்ப்பை வழங்கியுள்ளார்.

விசேட பிர முகர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை காரியாலய நேரங்கள் கடமைப்பழு நேரங்களில் மேற்கொள்வதை தவிர்க் குமாறும் பொலிஸாருக்கு உயர் நீதி மன்றம் உத்தரவு பிறப் பித்துள்ளது.

வீதிசேதனைச் சாவடியில் வைத்து கைது செய்யப்படும் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்படுவது அவரது அடிப்படை மனித உரிமையை மீறும் செயலென தீர்மானிப்பதையடுத்து உயர்நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கி உத்தரவை பிறப்பித்துள்ளது.

வீதிச் சாவடிகளில் பொலிஸ்அதிகாரிகள் தங்களது அதிகாரங்களை மீறி செயற்படுவதனால் சாதாரண மக்களின் அடிப்படை உரிமை பெருமளவில் மீறப்படுவதாக உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. பத்து சோதனைச் சாவடிகளை கடந்து படகொன்றில் ஆயுதங்கள் மறைத்து கொண்டு வரப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபரினால் வெளியிட்டுள்ள அறிக்கைக்கு அமைவாக வீதிச் சோதனைச்சாவடிகள் வெற்றியளிக்கவில்லை என்பது தெளிவாகியுள்ளது என்றும் பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாகனத்தை செலுத்திய ஒருவர் வீதிச்சோதனைச் சாவடியில் வைத்து சோதனையிடும்போது அவரது சாரதி அனுமதிப்பத்திரம் போலியானது என கண்டறியப்பட்டால் அவரை விளக்கமறியலில் வைப்பதன் மூலம் அவரது அடிப்படை உரிமை மீறப்படுவதாக உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. இதற்கமைய மனுதாரர் ஒருவருக்கு பொலிஸ் அதிகாரிகள் நால்வர் தலா75 ஆயிரம் ரூபா வீதமும் அரசாங்கம் 75 ஆயிரம் ரூபாவினையும் வழங்க வேண்டும் என்று உயர் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-5)

## மனித நேயப்பணிகளுக்கு இடையூறு விளைவிக்காதீர்கள் வவு.அரசுசாரா நிறுவனங்கள் இன்று பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

வவுனியா அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்களது பாதுகாப்பை வலியுறுத்தி இன்று புதன்கிழமை பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தியுள்ளன.

இது தொடர்பில் வவுனியா அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளியிட்டுள்ள அறிக்கை , வவுனியா மாவட்ட மனித நேய பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களினதும் ஊழியர்களினதும் பாதுகாப்பையும் அச்சமற்ற சுதந்திரமான செயற்பாட்டினையும் உறுதிசெய்வதோடு அனைவரையும் ஊக்கப்படுத்துமாறும் தொடர்புடைய அனைத்துத்தரப்பினரையும் வேண்டி நிற்கின்றோம்.

மனிதநேய பணிகளில் ஈடுபடும் நிறுவன ஊழியர்கள் வன்முறைக்கு உள்ளாக்கப்படல், கடத்தல், பணம் கோரல் மற்றும் பல்வேறுபட்ட அழுத்தங்களுக்குள்ளாக்கல் போன்றவை ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாகும்.

வவுனியா மாவட்டத்தில் மனிதநேயப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கும் அதன் ஊழியர்களுக்கும் தங்கள் பணிகளை செவ்வன செய்வதற்கான சூழலும் சந்தர்ப்பங்கள் மிக அரிதாகிக்கொண்டு செல்கின்றது.

அந்த நிறுவனங்களில் உள்ள ஊழியர்கள் பாரிய உயிர் அச்சுறுத்தல்களுக்கும் அழுத்தங்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள். அதிகரித்துவரும் இச்சம்பவங்களால் மனித நேய பணியாளர்களும் நிறுவனங்களும் பாரிய சவால்களை எதிர் நோக்குகின்றனர்.

கடந்த காலங்களில் இடப்பெயர்வு இயற்கைப்பேர் அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கான இந்த நிறுவனங்களின் பணி மகத்தானது. அதேபோன்று இக்கால கட்டத்திலும் மிக அவசியமாக உணரப்படுகின்றது.

இந்த அடிப்படையில் மனித நேயத்தை மதிக்கும் அனைவரிடமும் ஒன்றியம் ஓர் மனம் திறந்த பணிவான வேண்டுகோளை விடுக்கின்றது.

மனித நேயப்பணிகளுக்கு இடையூறுகளை விளைவிக்காதீர்கள். விளைவிக்க அனுமதியாதீர்கள். பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக பணியாற்ற இந்த நிறுவனங்களுக்கும் ஊழியர்களுக்கும் ஓர் ஆரோக்கியமான சூழலை உருவாக்க செயற்படுங்கள் . இப்படியான ஓர் பொதுவான வேண்டுகோளை அனைவரிடமும் கேட்கின்ற அதே நேரத்தில் நாம் எதிர் நோக்குகின்ற ஆபத்துக்களின் ஆழத்தையும் வேதனைகளையும் அனைவரின் கவனத்திற்கு கொண்டுவருவதற்காக இன்று வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது கடமைகளை தவிர்க்கின்றனர்.

இந்த நடவடிக்கையானது எவரையும் பாதிப்புக்குள்ளாக்கவோ அல்லது எவரிற்கும் எதிராகவோ அல்ல. எமது இக் கட்டான நிலையினை எடுத்தியம்புவதற்கான ஓர் நடவடிக்கை மட்டுமாகும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## ஊடக அடக்கு முறைக்கு எதிராக டிசெ. 10 ஆர்ப்பாட்ட பேரணி

(கொழும்பு)

ஊடக அடக்குமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்து சர்வதேச மனித உரிமைகள் தினமான எதிர்வரும் 10ஆம் திகதி ஆர்ப்பாட்ட பேரணியொன்றை நடத்தவுள்ளதாக சுதந்திர ஊடக அமைப்பின் அமைப்பாளர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இலங்கையில் ஊடக துறையினருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் கடந்த இரண்டு வருடங்களில் உக்கிர நிலையையடைந்துள்ளதோடு இது தொடர்பில் அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர் குற்றஞ்சாட்டினார்.

இதனால் ஐந்து முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று நாராஹென்பிட்டியவில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்த தீர்மானித்துள்ளதாகவும் இந்த ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஊடக அமைச்சுக்கு பேரணியாக சென்று கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் ஊடக அமைச்சர் அநுர பிரியதர்ஷன் யாப்பாவிடம் கையளிக்க தீர்மானித்துள்ளதாகவும் சுனந்த தேசப்பிரிய தெரிவித்தார். (அ-5)

## தமிழர்களின் விடுதலைக்கு இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும்

### வைகோ வலியுறுத்தல்

(சென்னை)

இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள அப்பாவித் தமிழர்களை விடுதலை செய்ய இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சென்னையில் அவர் வெளியிட்ட அறிக்கை,

நவம்பர் 30 ஆம்திகதி முதல் கொழும்பில் இருந்த ஈழத் தமிழர்கள் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே கொழும்பு நகரில் வாழும் தமிழர்கள் வெளியேற வேண்டும் என அரசு உத்தரவு போட்டபோது அதனை எதிர்காமல் சர்வதேச சமுதாயம் பின்வாங்கியது. அதன் பின்னர் ஈழச் சகோதர சகோதரிகள் எவ்வித முகாந்திரமும் இல்லாமல் கைது செய்யப்பட்டது கடும் கண்டனத்துக்கு உரியது. இந்த நடவடிக்கை தொடரும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தியா ஏராளமான ஆயுதங்களை இலங்கை அரசுக்கு வழங்கியுள்ளது. இதனை பயன்படுத்தி அங்குள்ள தமிழர்கள் கொடூரமாகக் கொல்லப்படுவதை மத்திய அரசு பார்த்துக் கொண்டு மௌனமாக இருக்கிறது.

அப்பாவித் தமிழர்களை கைது செய்ததன் மூலம் இனப் படுகொலை செய்யும் சிங்கள அரசின் முகத்திரை கிழிக்கப் பட்டுள்ளது.

கொழும்பு நகரில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளது. கடும் கண்டனத்துக்கு உரியது. இது விஷயத்தில் இந்திய அரசு கைது செய்யப்பட்ட ஈழத்தமிழர்களை உடனே விடுதலை செய்ய உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என வைகோ குறிப்பிட்டுள்ளார். (அ-5)

## வ/செ திட்டத்துக்கு எதிராக வாக்களிக்க மு.கா. கிழக்குப் பிரதிநிதிகள் முன்மொழிவு

(கொழும்பு)

வரவு–செலவுத் திட்ட மூன்றாம் வாசிப்பு மீதான வாக்களிப்பது பற்றிய தீர்மானத்தை எடுப்பதற்காக முஸ்லிம் காங்கிரசின் உயர்மட்டக் குழு இன்னும் சில தினங்களில் கூடவுள்ளது. இதுவரை முஸ்லிம்கள் வசமிருந்த காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்ற விடயம் உட்பட்ட முஸ்லிம்களின் பிரச் சினைகளுக்கு தீர்வுகிடைக்காவிட்டால் 3ஆம் கட்ட வாக்கெடுப்புக்கு ஆதரவாக வாக்களிக்க கூடாதென கிழக்கு மாகாண பிரதிநிதிகளின் நிறைவேற்றுக் குழுவுக்கு முன்மொழிந்துள்ளதாக முஸ்லிம் காங்கிரசின் பொதுச் செயலாளர் ஹசன் அலிதெரிவித்துள்ளார்.

இவ்வாக்கெடுப்பு தொடர்பாக தீர்மானிப்பதற்காக கடந்த 1ஆம் திகதி கூடிய நிறைவேற்றுக்குழு கிழக்கு மாகாணப் பிரதிநிதிகள் எழுப்பிய விடயம் காரணமாக 5 மணித்தியாலங்கள் நீடித்ததாக முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் எதிர்வரும் தினங்களில் அரசாங்கத்துடன் பேசவுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. (அ-5)

# ஆறுமுகன் தலைமையிலான குழு பூசா முகாமுக்கு நேற்று விஜயம்

(கொழும்பு)

தேடுதலின்போது கைது செய்யப்பட்டு பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையக இளைஞர், யுவதிகளில் 60 பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து மலையக அரசியல் தலைவர்கள் வலியுறுத்தியதை அடுத்து சந்தேகமற்ற மலையக இளைஞர்களை விடுவிக்குமாறு ஜனாதிபதி பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதற்கிணங்க 60 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர். இன்று மேலும் 81 மலையக இளைஞர், யுவதிகள் விடுவிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. நேற்றுக் காலை பூசா முகாமுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், செயலாளர் முத்து சிவலிங்கம்,தேசிய அமைப்பாளர் ஆர்.யோகராஜன், பிரதி அமைச்சர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் பூசா சிறைச்சாலைக்கு விஜயம் செய்து அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையக இளைஞர், யுவதிகளைப் பார்வையிட்டனர். அவர்களின் குறைபாடுகளையும் கேட்டறிந்து கொண்டனர். கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்ட மலையக இளைஞர், யுவதிகள் 141 பேரை மட்டுமே இவர்கள் சந்தித்துப் பேச அனுமதிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான குழுவினர் மலையக இளைஞர், யுவதிகளின் விடுதலை குறித்து அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளனர். இதுகுறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் ஆர்.யோகராஜன் தெரிவித்ததாவது,

பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை நாம் பார்வையிட்டோம். அவர்களின் விடுதலை குறித்தும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இன்று (நேற்று) 17 யுவதிகள் உட்பட 60 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய 81 பேர் நாளை (இன்று) விடுவிக்கப்படுவர். ஏனையவர்களையும் படிப்படியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ச-5)

# குடும்பஸ்தர் மூவர் நேற்று சரணடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

உயிர் அச்சுறுத்தல் காரணமாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் குடும்பஸ்தர்கள் மூவர் நேற்றுச் சரணடைந்துள்ளனர்.

மட்டுவில் வடக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த நேரக் கணிப்பாளராகப் பணியாற்றும் 49 வயதுடைய 8 பிள்ளைகளின் தந்தை தாவளை இயற்றாலை கொடிகாமத்தை சேர்ந்த 29 வயதுடைய குடும்பஸ்தர்; மற்றும் சண்டிலிப்பாய் வடக்கு அளவெட்டியைச் சேர்ந்த 41 வயதான வியாபாரியான குடும்பஸ்தர் ஆகியோரே நேற்றுச் சரணடைந்துள்ளனர். (ச-4)

# ஆயிரக்கணக்கான தமிழர்கள்...

கைது குறித்து நாம் ஆழ்ந்த கவலை கொள்கின்றோம்.

பேருந்துகளில் தமிழர்கள் ஏற்றப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகவும் 50 பெண்கள் உட்பட 400ற்கும் மேற்பட்டோர் காலி அருகேயுள்ள பூசா முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பூசா தடுப்பு முகாமில் பெருந்தொகையானோர் தடுத்து வைக்கப்படுவதால் அவர்களுக்குரிய அடிப்படை வசதிகள் அங்கு கிடைக்காது. பாதுகாப்புக் காரணங்களுக்காக கைது நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கத்துக்கு உரிமை உள்ளபோதும், இத்தகைய அடிப்படை உரிமை மீறல்களை ஒரு போதும் மேற்கொள்ளக் கூடாது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் சந்தேகத்துக்குரியவர்கள் என்பதற்காகவே அனைவருமே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.எவர் மீதும் எந்த ஒரு முறையான குற்றச்சாட்டும் இல்லை.

அதேபோல் தடுத்து வைத்தல் தொடர்பான உத்தரவுகள் தெளிவற்றதாகவிருப்பதாகச் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். இலங்கை மனித உரிமைகள் ஆணையத்துக்காக ஜூலை 2006 ஆம் ஆண்டு ஜனாதிபதியின் வழி காட்டுதல் ஆணைக்கு முரணாக இது உள்ளது. கைது செய்யப்பட்டோர் அல்லது தடுத்து வைக்கப்பட்டோர் குறித்து 48 மணி நேரத்திற்குள் அவர்களின் குடும்பத்தாருக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று அப்போது கூறப்பட்டிருந்தது.

கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை உடனடியாக அரசாங்கம் விடுவிக்க வேண்டும். அனைத்துலக மனிதாபிமானச் சட்டம் மற்றும் தரங்களுக்கு ஏற்ற வகையில் அவசரகாலச் சட்டத்தை மறுபரிசீலனைக்குட்படுத்த வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச-5)

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ...

கடந்த சில தினங்களில் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் சந்தேகத்தின் பேரில் படையினரால் ஸ்கைது செய்யப்பட்டவர்களில் விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் நூறு பேர் இருப்பதாக பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பாக அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற 2 குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தேடுதல் நடவடிக்கைகளைப் படையினர் ஆரம்பித்தனர். இதன் காரணமாக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 2 ஆயிரத்து 185 பேரும் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த 369 பேருமாக மொத்தம் 2 ஆயிரத்து 554 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் தமது அடையாளத்தை நிரூபித்த ஆயிரத்து 959 பேர் உடனடியாக விடுதலைசெய்யப்பட்டனர். உரிய விசாரணைகளின் பின்னர் மேலும் 399 பேர் விடுவிக்கப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 100 பேர் விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 86 பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். 14 பேர் மலையகத்தைச் சேர்ந்தவர்கள். மேலதிக விசாரணைகளுக்காக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தமது அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாத மற்றும் 102 பேர் நீதிமன்றத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வைத்திருந்த அடையாள அட்டைகள் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்படுவர்.

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தமிழ் மக்கள் வகை தொகையின்றி கைது செய்யப்படுகின்றனர் என்று சில ஊடகங்களும் அரசியல் கட்சிகளும் அரசாங்கத்துக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றன. இதில் எவ்வித உண்மையுமில்லை.

அரசாங்கம் எந்தவொரு இனத்தின் மீதும் பாரபட்சமாக நடந்து கொள்வதில்லை. கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் தமிழ் மக்கள் அல்ல. முஸ்லிம்களும் சிங்களவர்களும் கூட இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு அநீதி இழைப்பதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டும் பொய்யானதே. அது உண்மை என்றால் நான் இந்த அரசாங்கத்தில் ஒட்டிக் கொண்டிருக்க மாட்டேன். வெளியேறி விடுவேன்.

ஏனெனில் நானும் ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவனே. தமிழ்க் கூட்டணியினருக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டிலும் உண்மையில்லை. ஏனெனில் அவர்கள் கொழும்பில் உயர் பாதுகாப்பு வலயங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்க எம்.பிக்களை விடவும் கூடுதலான பாதுகாப்பை அரசாங்கம் அவர்களுக்கு வழங்கியுள்ளது என்றும் அமைச்சர் கூறினார். (ச-5)

# ஜெயராஜ் - மகேஸ்வரன்...

அமைச்சர்கள் ஜனாதிபதியை மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் பதிலளிக்கின்றனர்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் பதில் எங்களுக்குத் தேவையில்லை. கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நாங்கள் சொல்வதை, எங்கள் முறைப்பாட்டை ஜனாதிபதியோ, அமைச்சர்களோ கேட்பதில்லை. கடந்த 72 மணித்தியாலயத்திற்குள் கொழும்பிலும் வெளிமாவட்டங்களிலும் 19 தமிழர்கள் காணாமல் போயுள்ளனர்.

மட்டக்களப்பிலும் இளைஞர்கள் காணாமல் போயிருப்பதாக தங்கேஸ்வரி எம்.பி என்னிடம் தெரிவித்தார். ஆகவேதான் கைது செய்து வைக்கப்பட்டுள்ள எமது தமிழ் இளைஞர், யுவதிகளை நீங்கள் கொலை செய்யப் போகின்றீர்கள்.எனவேதான் அவர்களை எங்களிடம் ஒப்படையுங்கள். நாம் அவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்புகிறோம் என்றார்.

அதற்கு, கைது செய்யப்பட்டவர்களில் ஆயிரத்து 606 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 2 ஆயிரத்து 184 பேரை இராணுவம் கைது செய்தது. இவர்களில் நேற்றுவரை விடுதலை செய்யப்பட்ட ஆயிரத்து 606 பேரைத்தவிர ஏனையோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை விசாரணை நடத்தி விடுதலை செய்வோம் என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பதிலுக்கு கூறினார்.

அத்துடன் ஜனாதிபதியை மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் மகேஸ்வரன் எம்.பிதான் பேசுகின்றார். ஜனாதிபதியிடம் சலுகைகளை பெற்றுவிட்டு அவரை விமர்ச்சிக்கின்றார் என்று கூறினார்.ஜனாதிபதியிடமிருந்து சலுகைகள் பெறுவ தற்காக இவர் இப்படி பேசுகின்றார் எனவும் எடுத்துக் கூறினார்.

அப்போது குறிப்பிட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பி என்.சிறி காந்தா தடுத்து வைக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்களை தரமுடியுமா என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயிடம் கேள்வி தொடுத்தார்.

அத்துடன் எவ்வளவு காலத்திற்கு தடுத்து வைத்திருப்பீர்கள் எனவும் மேலும் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே எவரையும் தடுத்து வைக்கவில்லை. விசாரணையின் பின்னர் விடுதலை செய்வோம் என்றார்.

அப்போது மீண்டும் குறுக்கிட்ட சிறிகாந்தா எம்.பி தடுப்புக் காவலில் உத்தரவின்றி தடுத்து வைத்து இளைஞர்கள் மீது விசாரணை நடத்துவது சட்டவிரோதம் என சுட்டிக்காட்டினார். அதேவேளை அமைச்சர் ஜெயராஜ், மகேஸ்வரன் எம்.பியுடன் வாய்த்தர்க்கம் புரிந்தார்.(ச-5)

# யால...

விட்டனர் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

புலிகளின் நடமாட்டத்தை அவதானித்த இராணுத்தின் கொமாண்டோ அணியினர் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்ததை அடுத்து இருதரப்பினருக்கும் இடையில் மோதல் வெடித்ததாக அவர் கூறினர்.

மோதலையடுத்து மேலதிக படையினர் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும் தேடுதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு தரப்புதெரிவித்துள்ளது.(ச-5)

# சின்னக்...

சென்றபோதே ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா, பிரேதபரிசோதனைக்காகச் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-4,5)

# நாயன்மார்கட்டுப் பகுதியில்...


அங்கிருந்த பொருள்களைச் சேதப்படுத்தி விட்டும் சென்றுள்ளது. கொள்ளையர்கள் மேற்கொண்ட தாக்குதலில் யாழ். இந்துக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் அருணாசலம் சிறிக்குமார் (வயது-62), மனைவி அருந்ததி (வயது-60) மற்றும் மகள் சிறிமதி (வயது-29) ஆகியோர் படுகாய மடைந்த நிலையில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் அம்புலன்ஸ் வாகன உதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேசமயத்தில் நாயன்மார்கட்டு செல்லர் வீதியிலுள்ள வீடொன்றினுள் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்தும் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்ததுடன் அங்கிருந்த பொருள்களையும் சேதப்படுத்தி வீட்டிலிருந்தவர்களையும் கூரிய ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.

குறித்த வீட்டின் குடும்பத் தலைவர் தனியார் பாதுகாப்புச் சேவை ஒன்றில் பணிபுரிவதனால் கடமைக்குச் சென் றிருந்ததாகவும் அவரின் மனைவி மற்றும் மகள் தாக்குதலில் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள்மதுபோதையில் இருந்ததாகவும் அவர்கள் வெள்ளை வேட்டி, சேட்டு அணிந்திருந்ததாகவும் கூறப்பட்டது. குறித்த கொள்ளைச் சம்பவம் தொடர்பாகக் கோப்பாய்ப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கோப்பாய் பிரதேச செயலாளர் வீட்டிற்கு முன்பாகவிருந்த சொரூபம் ஒன்றையும் கொள்ளையர்கள் அடித்து நொருக்கியுள்ளனர். (ச-5)


MATHS CENTRE

M.M.V Road - Nelliady


தரம் - 6 முதல் O/L வரை

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

காலம் :- 05.12.2007

புதன் p.m. 3.30

(c-575)





இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.